18.03.2025 வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 173 /2022 ) திரு.பொன்ராஜ்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>-

1) நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் கிழவிபட்டி கிராமத்தில். 1ம்பிரதிவாதியான முருகனை தெரியுமா என்றால் தெரியும் அவர் என் வீட்டிற்கு கீழ்பக்கம் உள்ளார். வாதி மொட்டையசாமி எனது சொந்தக்காரர் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிப்பதற்கு சாட்சி அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வாதி சொல்லி வந்துள்ளேன்.முருகன் (1ம்பிரதிவாதி)வீட்டிற்கு கிழக்கே தென்வடல் ரோடு உள்ளதா என்றால் உள்ளது. முருகன் வீட்டிற்கு மேல்பக்கம் தான் வாதி மொட்டைசாமி வீடு உள்ளது என்றால் சரிதான். வாதி மொட்டையசாமி வீட்டிற்கு வடக்குபக்கம் முத்துராமலிங்கம் வீடும், காலிமனையும் உள்ளது என்றால் சரிதான். முருகன் வீட்டிற்கு முன்னால் காலிமனை உள்ளது என்றால் சரிதான் தற்போது வேல்முருகன் என்பவர் செட்டு போட்டு 2 மாதம் ஆகிறது. செட்டுப்போட்டுள்ளதாக சொல்லுவதற்கு ஆதாரம் உள்ளதா அதை தாக்கல் செய்ய முடியுமா என்றால் அதனை வாதியிடம் தான் கேட்கவேண்டும். வாதி மொட்டையசாமி தாவாச்சொத்தாக சொல்லும் இடம் முருகன் வீட்டிற்கு வடக்கே காலியிடத்தை தான் எனது இடம் என்று கூறுகிறார் என்றால் இல்லை. மொட்டையசாமி வீட்டிற்கு வடக்கு பகுதியை தான் எனது இடம் என்று வாதி கூறுகிறார். வாதி தனது இடம் என்று சொல்லும் இடத்திற்கு ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை பட்டா வைத்திருக்கலாம். எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

2) நான் சொல்லும் இடம் 1ம்பிரதிவாதியின் தந்தை இருளப்பன் என்பவருக்கு 07.08.2012ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அது பிராது 2வது தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இருளப்பனுக்கு பிராது 2வது தபசில் சொத்தை ஆண்டு அனுபவம் செய்து வந்து சர்வே எண்.266/19 பட்டா எண்.28ன்படி பாத்தியப்பட்டு 1ம்பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த பட்டா,செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்து தான் பிராது 2வது தபசில் சொத்து என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் 2 வது தபசில்

சொத்து வாய்மொழி கிரையம் பெற்றதாக சொல்லுவது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போன்று சொத்தின் நான்கு மால்கள் எல்லைகள் உண்மையல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்குபற்றி எனக்கு எந்த ஒரு விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. நான் எனது உறவினருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.03.2025.